2006 செப்டம்பர் 1]

132—

சார்பு நீதிமன்றம்

***2003—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், அரூரை மையமாகக் கொண்டு சார்பு நீதிமன்றம் ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூரை மையமாகக் கொண்டு சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கே ஒரே ஒரு Sub-court–தான் உள்ளது. 5 தாலுகாக்கள் உள்ளன. அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஊத்தங்கரை, இந்த 3 வட்டங்களில் 20, 40 ஆண்டு காலமாகச் செயல்படக்கூடிய J.M. Court–களை உள்ளடக்கி, அரூரிலே ஒரு Sub-court-ஐக் கொண்டு வருவதற்கான அத்தனை பணிகளும் தொடங்கப்பட்டதாக அறிகிறேன். தருமபுரி மாவட்டத்தினுடைய மரியாதைக்குரிய நீதிபதி, C.J.M. அவர்களும் அறிக்கை ஒன்றை, இங்கே சென்னை, உயர் நீதிமன்ற நீதியரசர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஏறக்குறைய 120 கிலோ மீட்டர் தூரம் சுற்றளவிலுள்ள பல மக்களிடமிருந்து வருகின்ற வழக்குகள் அத்தனையும், தருமபுரியில் நடைபெறுகின்ற வழக்குகள் சரி பாதிக்கு மேல் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து, அரூரில் 40 ஆண்டு காலமாக இருக்கின்ற அந்த மக்களுடைய கோரிக்கையான J.M. Court–ஐ, Sub-court–ஐக் கொண்டு வருவதற்கு அறிவிப்பைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம்

அங்கே 250 வழக்குகளும், அதுவும் appeal வழக்குகள் 200 வழக்குகளும், ஆக 450 வழக்குகள் இருக்க வேண்டும். அங்கே வழக்குகள் போதுமானவையாக இல்லை என்று எனக்கு இங்கே வழங்கப்பட்டிருக்கின்ற குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு போதுமான அளவு வழக்குகள் நிலுவையிலே இருந்தால், நிச்சயமாக அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

முற்பகல் 9–35

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் நடைபெறுகின்ற வழக்குகளில், குறைந்தது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கும் மாறாக, 307 வழக்குகள் என்பது, அங்கே அரூர், பாப்பிரெட்டிப்பட்டியை உள்ளடக்கிய வழக்குகள் தருமபுரி sub-court–லே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய, ஒரு வருடத்தில் நடக்கின்ற 1,300 வழக்குகளில் சரி பாதிக்கு மேல், அந்த இரண்டு வட்டங்களை உள்ளடக்கியவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த வருடமே அதற்கான பணிகளைத் தொடங்குவதற்காக இருக்கின்ற அம்சத்தில், நிதியை மட்டும் ஒதுக்கீடு செய்தால், அத்தனை பணிகளும் தொடங்கும் என்று அறிவித்திருப்பதையும் மீண்டும் நினைவுபடுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்குகளுடைய எண்ணிக்கையைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்; அது மொத்தமாக இருக்கலாம். உரிமையியல் வழக்குகள் 250 இருக்க வேண்டும்; மேல்முறையீடு 200 இருக்க வேண்டும் என்பதை ஒரு அளவுகோலாக வைத்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, தூரம் அதிகமாக இருக்கிறது; வட்டங்கள் அதிகமாக இருக்கின்றன; அந்தப் பகுதியின் சுற்றளவு அதிகமாக இருப்பதால், அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவ்வாறு இருப்பின், நிச்சயமாக அதைத் தனிப் பிரேரணையாக அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

2006 செப்டம்பர் 1]

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளதால், அங்கு இயங்கிக்கொண்டிருக்கும், Judicial Magistrate-I, Judicial Magistrate-II, இவற்றில் Judicial Magistrate-I அல்லது II–ல் உள்ள Judicial Magistrate–ஐ, ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு மாற்றம், அதாவது, shift செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, அவ்வாறு மாற்றம் செய்யும் எண்ணம் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

133—

தங்கும் விடுதி

***930—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்தூர் தொட்டிப் பாலம் வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்தூர் தொட்டிப் பாலம் வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருதல் குறித்துத் தற்போது சுற்றுலாத் துறையில் திட்டம் எதுவுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கொடுமுடி என்பது, மும்மூர்த்திகள் இருக்கிற திருத்தலம். அதுவும், சேலம் மற்றும் தருமபுரி